# சங்கீத இரு வருட முழு நேர உயர் டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்

## 2023/2024 கல்வி வருடத்திற்காக புது மாணவர்களை உள்வாங்குதல்(தமிழ் மொழி)

1.0 சங்கீதம் தொடர்பான 02 ஆண்டுகள் முழு நேர நடன உயர் நிலை டிப்ளோமா பாடநெறி 2023/2024 கல்வி ஆண்டிற்கான மாணவர்களை உள்வாங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

1.1 1978 ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டத்தின் இலக்கம் 1 ன் படி இணைக்கப்பட்ட, டவர் மண்டப அரங்க மன்றம், யுனெஸ்கோவுடன் இணைந்த சர்வதேச கலை நிகழ்ச்சிக் கழகத்தின் (ITI) இலங்கைப் பிரதிநிதியாகும், சங்கீதம் தொடர்பான முழுநேர உயர் டிப்ளோமா பாடநெறிக்கு முதல் முறையாக 2023 ஆம் ஆண்டு கல்வியாண்டில் புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்கிறது. பாடநெறி காலம் 02 ஆண்டுகள்.

1.2 இந்தப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்கள் தொடர்பான விரிவுரைகள் மற்றும் நடைமுறைச் செயற்பாடுகள் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பாட நிபுணர்களால் நடாத்தப்படும். இந்த (இரண்டு வருட) முழுநேர உயர் டிபளோமா இன் நடனப் படிப்பை வெற்றிகரமாக முடிக்கும் மாணவர்கள் பட்டப்படிப்பைத் தொடர தகுதியுடையவர்கள்.

1.3 இப் பாடநெறி (SLQF) 03 மற்றும் 04 மட்டங்களை உள்ளடக்கியது

1.4 இவ் உயர் டிப்ளோமா பாடநெறிக்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்..60 மாணவர்கள் சிறந்த தகுதி அடிப்படையில் சங்கீத பாடநெறிக்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

1.5 இவ் நடைமுறை நேர்முகத் தேர்வானது சங்கீதம் தொடர்பான ஒரு கட்டமைக்கப்பட்டிருக்கும்.

1.6 இப் பாடநெறியானது தமிழ் மொழியில் நடைபெறும்.

1.5 இப் பாடநெறிக்கு மாணவர்களுக்கு தங்கும் இட வசதி வழங்கப்பட மாட்டாது.

2.0 **பாடநெறிக்கான தகுதிகள்**

2.1 கல்வித் தகைமை

(அ). க.பொ.த (சா.த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் தமிழ், கணிதம், சங்கீதம் ஆகிய 03 பாடங்களுடன் வேறு ஏதேனும் மூன்று பாடத்தில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் ஒரு அமர்வுகளுக்கு மேற்படாமல் பாடத்தில் சித்தியடைந்தருத்தல் வேண்டும்.

(ஆ). க.பொ.த (உ.த) பரீடசையில் ஒரே அமர்வில் சங்கீதம் உட்பட 03 பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2.2 வேறு தகைமைகள்

நேர்முகத் தேர்வின் போது தேசிய மற்றும் சர்வதேச அளவிலான சங்கீதப் போட்டி வெற்றிகள் மற்றும் பிற சங்கீதம் தொடர்பான படிப்புகளுக்கும் புள்ளிகள் வழங்கப்படும்.

3.0 2023 யூன் மாதம் 9 ஆம் திகதி அன்று விண்ணப்பத்தாரியின் வயது 18 வயதுக்கு குறையாமலும் 23 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

4.0 குறிப்பிட்ட பாடநெறியில் சங்கீத பயிற்சிகள் உள்ளன. இப் பாடநெறிக்கு நீங்கள் தெரிவு செய்யப்பட்டால் பாடநெறியினை தொடங்குவதற்கு சிறந்த உடல், நல ஆரோக்கியம் உள்ளது என அரச மருத்துவரிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மருத்துவ சான்றிதழ் ஒன்றினை சமர்ப்பிக்கக வேண்டும்.

5.0 மதகுருமார்கள் மற்றும் அரச சேவையில் உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியாது.

6.0. **பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோறுதல்**

6.1 இந்தப் படிப்புக்கான விண்ணப்பங்கள் ஆன்லைனில் மட்டுமே வழங்கப்படுகிறது. www.towerhall.lk.si என்ற இணையத்தளத்திற்குச் சென்று விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்யலாம்.

6.2 விண்ணப்பக் கட்டடணமாக 2000.00 விண்ணப்பத்தாரியின் ஊடாக - **ஹயிற்பார்க் (Bank of Ceylon - Hyde Park) இலங்கை வங்கிக் கிளைக் கணக்கு இலக்கம் 2327541, டவர் மண்டப அரங்க மன்றம் -** என்னும் பெயருக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்ட இடத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும். விண்ணப்பக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டை ஒட்டி அனுப்பாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப் படிவங்கள் எந்த வித முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். எக் காரணம் கொண்டும் வைப்பிலிட்ட பணம் திரும்பிச் செலுத்தப்படமாட்டாது.

6.3 அனைத்து விண்ணப்பப் படிவங்களும் 2023.யூன் மாதம் 09 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுத்தபாலில் **பணிப்பாளர் நாயகம், டவர் மண்டப அரங்க மன்றம், சவ்சிறிபாய, 123, விஜேராம மாவத்தை கொழும்பு - 07** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். டவர் அரங்க மன்றம் தாமதமான அல்லது தொலைந்து போன விண்ணப்பங்களுக்கு பொறுப்பாகாது.

6.4 விண்ணப்பப் படிவம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **சங்கீத உயர் டிப்ளோமா பாடநெறி - 2023** (தமிழ்மொழி) எனக் குறிப்பிடல் வேண்டும்.

6.5 விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதிகளில் உறுதிப்படுத்தி கையொப்பம் சான்றளிப்பது கட்டாயமாகும்.

07. **பாடநெறிக்கட்டணம்**

| | | |
|---|---|---|
| 01 | பாடநெறிக்கான ஆரம்பப் பதிவுக் கட்டணம் | 50000.00 |
| 02 | மிகுதிப் பணம் 03 தவணைகளின் அடிப்படையில் கல்வி ஆண்டின் பரீட்சைக்கு முன்னராக செலுத்தலாம். முதல் தவணை 30000.00 இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைப்பணமாக 25000.00 செலுத்த வேண்டும். | 80000.00 |
| 03 | பாடநெறிக்கான முழுக் கட்டணம் | 130000.00 |

8.0 தொலைபேசி இலக்கம்

தொலைபேசி எண்களைக் குறிப்பிடும்போது, நிலையான மொபைல் எண், வீட்டு எண் (இருந்தால் மட்டும்) மற்றும் Whatsapp க்கு பயன்படுத்தப்படும் எண் ஆகியவற்றை சரியாக குறிப்பிட வேண்டும். படிப்பில் சேரும் வரை இந்த தொலைபேசி எண்கள் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும், மேலும் ஏதேனும் காரணத்திற்காக அவை மாறினால், டவர் மண்டப அரங்க மன்றத்திற்கு உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.

………………..                                                                 ……………………..

திகதி                                                                 பணிப்பாளர் நாயகம்

**புத்தசாசனம் சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

**டவர் மண்டப அரங்க மன்றம்**